பற்றியும்தான் கேட்டு இருக்கிறார்கள், ஆம்புல்ன்ஸ் பற்றி அவர்கள் குறிப்பிடவில்லை இருந்தாலும் மொத்தமாக என்னென்ன வசதிகள் தேவை எனபதைப் பார்த்து, நிதி வசதிக்கேற்ப என்ன செய்ய முடியுமோ அத்றகேற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : வினா எண் 264. திரு. என். ஆர், ராஜேந்திரன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

264—

<u>அரசுக்குச் சொந்தமான போக்குவரத்துக் கழகங்கள்,</u>

*3788—<u>திரு, என். ஆர். ராஜேந்திரன்</u> :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் அரசுக்குச் சொந்தமான போக்குவரத்துக் கழகங்கள் எத்தனை உள்ளன?

(ஆ) அவைகளில் பணியாற்றும் நிர்வாக இயக்குநர்கள் மற்றும் பொது மேலாளர்கள் எத்தனை பேர்?

(இ) நிர்வாக இயக்குநர் மற்றும் பொது மேலாளர் பதவிகளில் இட ஒதுக்கீடு முறையில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படுகிறதா?

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழகத்தில் அரசுக்குச் சொந்தமாக 15 (பதினைந்து) போக்குவரத்துக் கழகங்கள் உள்ளன,

(ஆ) அவைகளில் மொத்தம் 15 நிர்வாக இயக்குநர்களும், 15 பொது மேலாளர்களும் உள்ளனர்.

(இ) இந்தப் பதவிகளுக்கு இட ஒதுக்கீடு முறையில் நியமனம் செய்ய விதிகளில் இடம் இல்லை.

<u>திரு. என். ஆர். ராஜேந்திரன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இட ஒதுக்கீடு என்பது எல்லாத் துறைகளிலும் இருக்கும்போது, போக்குவரத்து நிறுவனங்களில் மட்டும் ஏன் இல்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகங்களில் இட ஒதுக்கீட்டிலே தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18 சதவீதம் ஒதுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிர்வாக இயக்குநர், பொது மேலாளர் போன்றவர்களைப் பற்றி கேள்வி கேட்டு இருக்கிறார். அதிலே இட ஒதுக்கீட்டிற்கு சம்பந்தம் இல்லை. இப்போது மொத்தம் 15 போக்குவரத்துக் கழகங்கள் தமிழகத்திலே இயங்கிக் கொண்டு இருக்கின்றன. தமிழகத்தின் ஒப்பற்ற தலைவியாக இருக்கிற தமிழக முதல்வர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் நூறே நாளில் மீண்டும் ஒரு போக்குவரத்துக் கழகத்தை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயரால் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு இருப்பதைப்போல், உறுப்பினர் அவர்கள் கேட்டதைப்போல, நிர்வாக இயக்குநர்களாக, தாழ்த்தப்பட்டவர்கள் இன்றைக்கு அதிலே பணியாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். திரு. ராஜ்குமார் என்பவரும், திரு. ஜெயராஜ் என்பவரும் நிர்வாக இயக்குநர்களாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். பொது மேலாளர்களாக திரு, பாலசுந்தரம் என்பவரும், திரு, வீரமலை என்பவரும் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

திரு. என். ஆர். ராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே' மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கு நன்றி, அதாவது பணி ஒதுக்கீடு முறையில் இட ஒதுக்கீடு செய்யாமல் தாழ்த்தப்பட்டவர்களுக்கு கடைநிலை ஊழியர்களாக மட்டும் இட ஒதுக்கீடு செய்து பணி அமர்த்தப்படுகிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அதற்கு விளக்கம் அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தமிழகத்தின் முதல்வராக இருக்கின்ற நம்முடைய ஒப்பற்ற தலைவியாக இருக்கின்ற புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் தாழ்த்தப்பட்டுள்ளவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள 18 சதவீதத்தைப் போக்குவரத்துக் கழகங்கள் தவறாமல் பூர்த்தி செய்து கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன், (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ. என். பொன்னம்மாள்,

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முதலில் சொன்ன பதிலில், இதிலே இட ஒதுக்கீட்டிற்கு சட்டத்திலே இடம் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் எல்லா துறைகளிலும், எங்கெங்கெல்லாம் தகுதியும் திறமையும் வாய்ந்த ஆதி திராவிட இனத்திலிருந்து வருகின்ற மக்களுக்கு கட்டாயமாக 18 சதவீதம் இட ஒதுக்கீடு கொடுக்க வேண்டுமென்ற ஒரு நிலை இருக்கிறது. அதை மறுபடியும் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு, அதாவது உயர்ந்த பதவிகளிலேகூட அவர்களுக்கு அந்தச் சலுகையை அளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிர்வாக இயக்குநரும் பொது மேலாளரும் பரமோஷனில் வருகிறவர்கள் நேரடித் தேர்வு மூலம் நியமிக்கப்படுபவர்கள் அல்ல. ஆகவேதான் அதைக் குறிப்பிட்டேன். ஆகவே, அதிலே இட ஒதுக்கீட்டிற்கு சம்பந்தமில்லை என்று நான் குறிப்பிட்டேன். நீங்கள் குறிப்பிட்டதைப் போல அத்தனை துறைகளிலும் நடக்கின்ற தேர்வுகளில் 18 சதவீதம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முன்னுரிமை வழங்குவதைப் போன்று, அத்தனை இடங்களிலும் போக்குவரத்துக் கழகங்கள் பூர்த்தி செய்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. பி. ராஜூ.

திரு. கே. பி. ராஜூ : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பேருந்துகளில் பெண்களை ஓட்டுநராக நியமிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது மூல வினாவிற்குச் சம்பந்தம் இல்லாத துணைவினா.

வினா எண் 265. டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

265—

தாயகத்திலுள்ள தமிழர்களுக்கு தேயிலைத் தோட்டங்கள் அமைத்தல்.

*4193 டாக்டர் எம். கருப்புசாமி :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

TRUTH ALONE TRIUMPHS